டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 25 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 226 - Madurai | Online Edition

# வணிக சிலிண்டருக்கான எல்பிஜி ஒதுக்கீட்டை அதிகரித்தது மத்திய அரசு

புது தில்லி, மார்ச் 21

வணிக லிண்டர் தட்டுப்பாடை போக்கும் விதமாக எல்பிஜி ஒதுக்கீட்டை மேலும் 20 சதவீதம் அதிகரித்து ஆணை பிறப்பித்துள்ளது மத்திய அரசு. போர் பதற்றம் காரணமாக வணிக சிலிண்டர் தடுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், நாளை (23ம் தேதி முதல் இந்த உத்தரவு அமலுக்கு வருகிறது.

மத்திய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சக செயலாளர் நீரஜ் மிட்டல், அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கும் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

வணிக ரீதியான எல்பிஜிக்கு 30 சதவீத ஒதுக்கீடு ஏற்கனவே வழங்கப்பட்ட நிலையில் வரும் 23ம் தேதி முதல் கூடுதலாக 20 சதம் ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இதன் மூலம் மொத்தமாக ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த கூடுதல் 20 சதவீதம் ஒதுக்கீட்டில் உணவகங்கள், தொழிற்சாலை கேன்டீன்கள், உணவு பதப்படுத்துதல், பால் பண்ணை, அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் இயக்கப் படும் மலிவு விலை உணவகங்கள், சமூக சமையலறைகள், புலம் பெயர் தொழிலாளர்களுக்கான 5 கிலோ சிலிண்டர் களுககு முன்னுரிமைய அளிக்கப்படும்.

குழாய் வழி இயற்கை எரிவாயு இணைப்பிற்கு மாறுவதற்குத் தயாராக உள்ளவர்கள் மற்றும் அதற்கு விண்ணப்பித்த வர்களுக்கு மட்டுமே இந்த 50 சதவீதம் ஒதுக்கீட்டின் கீழ் எரிவாயு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொடைக்கானல் பகுதி மலை வாழைக்கு கடும் கிராக்கி

திண்டுக்கல், மார்ச் 21

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைக்கிராம பகுதிகளில் பிரதான தொழிலாக விவசாயம் உள்ளது. குறிப்பாக மலை வாழை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும் கீழ் மலைப்பகுதியில் சாகுபடி செய்யப்படும், மருத்துவ குணம் கொண்ட மலை வாழைக்கு, சந்தைகளில் பெரும் வரவேற்பு உள்ளது. பண்ணைக்காடு, தாண்டிக்குடி, பெருமாள் மலை, பேத்துப்பாறை, வட கவுஞ்சி உள்ளிட்ட மலைக் கிராமங்களில் பல ஏக்கர் பரப்பளவில் மலை வாழை பயிரிடப்பட்டு வருகிறது.

கடந்த சில மாதங்களாக வன விலங்குகள் விவசாய விளைநிலங்களை சேதப்படுத்தி வருவதால், மலை வாழை விவசாயத்தில் பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் வடகவுஞ்சி கிராமத்தில் நடைபெற்ற மலை வாழை சந்தையில், வாழை வரத்து குறைவால் வாழை கடந்த சில வாரங்களாக வாழை ஒன்று ரூ.10 வரை விற்பனையான நிலையில், தற்போது ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனையாகி வருவதாக மலைக்கிராம விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் தற்போது சந்தைக்கு கொண்டு வரப்பட்ட மலை வாழையானது, பழநி பஞ்சாமிர்தம் தயாரிக்கவும், சென்னை உள்ளிட்ட பெரு மாநகரங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. மலைவாழை விலை அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வன விலங்குகளால் மலை வாழை உள்ளிட்ட விவசாயத்தில் ஏற்படும் பாதிப்புகளை வனத்துறையினர் கவனம் செலுத்தி, கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# கறம்பக்குடி பகுதியில் பூத்து குலுங்கும் செண்டி பூக்கள்

புதுக்கோட்டை, மார்ச் 21

புதுக்கோட்டை மாவட்டம். நாஞ்சிக்கோட்டை பகுதியில் செண்டி பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. செண்டி பூக்கள் மூலம் குறைந்த காலத்தில் நிறைவான லாபம் கிடைப்பதாக விவசாயிகள் கூறினர். தமிழகத்தில் பூக்கள் அதிகம் சாகுபடி செய்யும் மாவட்டங்களில் மதுரை மாவட்டம் முதலிடத்தை பெற்று உள்ளது. மதுரை மாவட்டத்தில் மல்லிகை, ரோஜா, சாமங்கி ஆகிய பூக்களை விவசாயிகள் சாகுபடி செய்து அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வருகின்றனர்.

இதைப்போல சேலம், ஓசூர், திண்டுக்கல், நாமக்கல், கிருஷ்ணகிரி போன்ற பகுதிகளிலும் விவசாயிகள் அதிக அளவில் பூக்களை சாகுபடி செய்து வருகின்றனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் கறம்பக்குடி, மழையூர், வெட்டான்விடுதி, கருக்காகுறுச்சி, வாண்டான் விடுதி, பட்டத்திக்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தற்போது விவசாயிகள் செண்டி பூக்களை சாகுபடி செய்து வருமானத்தை ஈட்டுகின்றனர்.

செண்டி பூக்கள் சாகுபடி காலம் 50 நாட்கள் ஆகும். பின்னர் பூக்களை விவசாயிகள் பறிக்க தொடங்குவார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி பகுதிகளில் கிணறு, பம்பு செட்டு வசதியுடைய விவசாயிகள் செண்டி பூக்களை சாகுபடி செய்து வருகின்றனர். இதற்காக ஓசூரில் இருந்து செடிகளை வரவழைத்து வயல்களில் நடவு செய்து விடுகின்றனர்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மாடுகளில் கூர்மையான பற்கள் பால் உற்பத்திக்கு பாதிப்பு ஏற்படுத்தும் மறைமுக பிரச்சினை

மாடுகள் அசை போடும் பிராணிகள் என்பதால் அவை தினமும் அதிக அளவு நார்ச்சத்து கொண்ட பசுந்தீவனம் மற்றும் உலர்தீவனங்களைமென்று அசை போடுகின்றன. இதன் காரணமாக இயற்கையாகவே பற்களுக்கு தொடர்ந்து அழுத்தம் மற்றும் உராய்வு ஏற்படுகிறது.

இந்த செயல்முறையில் சில நேரங்களில், சில பற்கள் குறிப்பாக கடைவாய் பற்களில் தேய்மானமானது ஒரே சீராக இல்லாமல் சமமில்லாமல் நடக்கும் பொழுது ஒரு பக்கத்தில் மட்டும் மிகுந்த அளவில் தேய்மானமாகி பக்கவாட்டில் கூர்மை யான விளிம்புகள் உருவாகும். இவ்வாறு ஏற்பட்ட கூர்மையான பற்கள் மாடுகளின் வாயில் காயங்களை ஏற்படுத்தி, மாடுகளின் உணவு உட்கொள்ளும் திறனை குறைத்து, உடல் எடை மற்றும் பால் உற்பத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும். பால் உற்பத்தி குறை வதற்கு காரணம் தெரியாமல் கறவை மாடுகளை வைத்திருப் போர் தடுமாறும் நிலையை ஏற்படுத்தும். பல காரணங்களில் மிக முக்கியமான ஒன்று கூர்மையான பற்கள் ஆகும்.

**மாடுகளில் கூர்மையான பற்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்**

1. நார்ச்சத்து அதிகமுள்ள பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனங்களை குறைந்த அளவு கொடுத்து கலப்புத் தீவனத்தை அதிக அளவு கொடுக்கும் பொழுது கடை வாய்ப்பற்களில் அசை போடுதல் குறையும் பொழுது சீரான தேய்மானம் ஏற்படாமல் கூர்மையான பற்கள் உண்டாகும்.

2. சில மாடுகளில் சில பற்கள் அதிக அளவு தேய்மானம் அடையும் தன்மை கொண்டவையாக இருந்தால் மாடுகள் தொடர்ந்து அசை போடும் பொழுது பற்கள் தேய்மானமாவதில் வேறுபடுதல் ஏற்படுவதால் கூர்மையான பற்கள் ஏற்படுகின்றன.

3. மாடுகளின் தாடை அமைப்பு சரியில்லாமல் இருந்தாலும்,

சீரற்ற பற்களின் அமைப்பு மற்றும் சில மாடுகளில் இயற்கையிலேயே ஒன்றோ இரண்டோ பற்கள் அதிகமாக வளர்தல் காரணமாகவும் மாடுகள் அசை போடும் பொழுது பற்களின் தேய்மானத்தில் மாறுபாடுகள் உண்டாகும் பொழுது கூர்மையான பற்கள் ஏற்படுகின்றன.

4. வயதான மாடுகளில் வயது அதிகரிப்பால் பற்களின் வடிவம் மாறுதல் காரணமாக பற்களில் தேய்மானத்தில் ஏற்படும் பிரச்சினையால் கூர்மையான பற்கள் தோன்றும்.

மாடுகளில் கூர்மையான பற்கள் ஏற்படுத்தும் பாதிப்புகள்

- மாடுகள் தீவனத்தை மெல்லும் பொழுது கூர்மையான பற்கள் கன்னம், நாக்கு, ஈறுகள் மற்றும் மேலன்னம் ஆகிய வற்றில் காயங்களை ஏற்படுத்தும். இதன் காரணமாக மாடு களில் வலி காரணமாக பசுந்தீவனங்கள் மற்றும் காய்ந்த தீவனங்களை மெல்ல முடியாத நிலையை ஏற்படுத்தும்.
- வாயில் ஏற்பட்ட காயத்தால் குறைந்த அளவு தண்ணீர் குடிக்கும்.
- தீவனம் சரிவர உண்ணாத காரணத்தாலும் குறைந்தஅளவு தண்ணீர் குடிப்பதாலும் பால் உற்பத்தி மற்றும் உடல் எடை குறைவு ஏற்படும்.
- அசை போடுவது குறைவதால் ஜீரண மண்டலத்தில் பாதிப்பு உண்டாகும்.
- வாயில் ஏற்பட்ட காயத்தால் அதிக அளவு எச்சில் வடிதல் காணப்படும்.
- வாயில் உள்ள காயங்களில் நோய்த் தொற்று ஏற்பட்டால் வாயில் துர்நாற்றம் ஏற்படுவதுடன் நிலைமையை மேலும் மோசமாக்கி விடும்.

**கூர்மையான பற்கள் இருப்பதற்கான அறிகுறிகள்**

- மாடுகள் பசுந்தீவனம் மற்றும் காய்ந்த தீவனத்தை வாயில் சிறிதளவு மென்றுவிட்டு உடனடியாக கீழே துப்பி விடும்.
- மென்று சாப்பிடக்கூடிய தீவனங்களான பசுந்தீவனம் மற்றும் வைக்கோல் கடலைக்கொடி போன்ற உலர் தீவனங்களை உண்ண விரும்பாமல் கலப்புத் தீவனங்களை மட்டும் விரும்பி உண்ணும்.
- மாடுகள் தீவனங்களை மெல்லுவதற்கு அதிக நேரம் எடுத்து

கொள்ளுதல், குறைவான அசை போடுதல் காணப்படும்.

- மாடுகள் உட்கொள்ளும் தீவன அளவு திடீரென குறையும்.
- தினசரி கறக்கும் பாலின் அளவு குறையும்.
- கூர்மையான பற்கள் இருக்கும் பக்கத்தில் உள்ள கன்னங்களில் சரிவர மெல்லாத தீவனத்தை அடக்கி வைத்திருக்கும். மேலும் வாயில் துர்நாற்றம் வீசும்.
- வாயில் இருந்து நுரையுடன் கூடிய எச்சில் அதிகமாக வடியும்.



## சிகிச்சை முறை

கூர்மையான பற்களுக்கான அறிகுறிகள் தென்பட்டவுடன் கால்நடை மருத்துவரை அணுகி பரிசோதித்து கூர்மையான பற்களை சரி செய்வதற்கென்று இருக்கும் கருவி கொண்டு சரி செய்து கொள்ள வேண்டும். மேலும் கூர்மையான பற்களால் ஏற்பட்ட காயங்களுக்கு கிளிசரின் மருந்தை ஒரு நாளைக்கு 4 தடவை வீதம் காயங்கள் சரியாகும் வரை தடவ வேண்டும். காயங்கள் ஆறும் வரை கடினமான உலர் தீவனத்தை கொடுக்காமல் மென்மையான பசுந்தீவனங்களையும் கலப்புத் தீவனங்களையும் கொடுக்க வேண்டும். கால்நடை மருத்துவர் ஆலோசனையின் படி ஜீரண சக்தியை அதிகரிக்கும் டானிக்கையும் தரவேண்டும்.

## கூர்மையான பற்கள் வராமல் தடுக்கும் வழிமுறைகள்

- மாடுகளின் பற்களை ஆண்டுக்கு ஒரு முறை கால்நடை மருத்துவர் கொண்டு பரிசோதிக்க வேண்டும். மாடுகளின் பற்களில் ஏதும் மாறுபாடுகள் தென்பட்டால் உடனடியாக சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

- பசுந்தீவனம், உலர்தீவனம் மற்றும் கலப்புத்தீவனத்தை சரியான விகிதத்தில் வழங்க வேண்டும்.

- பற்களும் எலும்புகளும் நன்கு வலுவுடன் இருக்க தாது உப்புக் கலவை தினமும் 30 முதல் 50 கிராம் அளவில் தீவனத்தில் கலந்து தர வேண்டும்.

- வாயில் புண், நுரையுடன் கூடிய எச்சில் வடிதல் மற்றும் தீவனத்தை கடை வாயில் ஒதுக்கி வைத்தல் போன்ற அறிகுறிகள் தென்படுகிறதா என்பதை மாடுகளின் உரிமை யாளர்கள் தினசரி கண்காணிக்க வேண்டும்.

மாடுகளில் கூர்மையான பற்கள் என்பது சாதாரணமாக தோன்றும். ஆனால் பால் உற்பத்திக்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய முக்கியமான உடல் நல பிரச்சினை என்பதால் இதனை முன்னரே கண்டறிந்து தக்க பராமரிப்பு முறைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

தகவல் : முனைவர் இரா. உமாராணி, பேராசிரியர், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.

# தென்னை வேர் சாத்துாட்டால் பற்றி வேளாண் கல்லூரி மாணவர்கள் செய்முறை விளக்கம்



திருச்சி, மார்ச் 21

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில். துவாக்குடியில் தென்னை வேர் சத்து உடல் பற்றி அங்குள்ள விவசாயிக்கு செயல்முறை விளக்கம் அளித்தனர்.

**TNAU தேங்காய் டானிக் பயன்படுத்தும் முறை**

**தேவையானவை :** TNAU தென்னை டானிக் (200 மி.லி/மரம்), ஒரு பிளாஸ்டிக் பை (10முு15 செ.மீ) அல்லது பிளாஸ்டிக் பாட்டில், கத்தி, ஊசி.

**வேர் தேர்வு :** தென்னை மரத்தின் வேர்ப்பகுதியில், மண்ணுக்கு சற்று மேலே, ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான, இளம் பழுப்பு நிற வேரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**வேர் வெட்டுதல் :** வேரைச் சுத்தப்படுத்தி, அதன் நுனியில் 5 செ.மீ நீளத்திற்கு கூர்மையாக வெட்ட வேண்டும்.

**டானிக் தயார் செய்தல் :** 200 மி.லி டானிக் கரைசலை எடுத்து, அதனுடன் 200 மி.லி தண்ணீர் சேர்த்து 1:1 விகிதத்தில் நீர்க்கச் செய்ய வேண்டும்.

**பொருத்துதல் :** இந்த கரைசலை ஒரு பிளாஸ்டிக் பையில் நிரப்பவும். வெட்டப்பட்ட வேர் முனையை பைக்குள் வைத்து, நீர் கசியாதவாறு கயிறு கொண்டு பிளாஸ்டிக் பையை இறுக்கமாகக் கட்டவும்.

**பராமரிப்பு :** டானிக் முழுமையாக உறிஞ்சப்படும் வரை, சுமார் 24 மணி நேரம் வரை காத்திருக்க வேண்டும்.

# ஈரோடு மார்க்கெட்டுக்கு பலாப்பழம் வரத்து அதிகரிப்பு

ஈரோடு, மார்ச் 21

பண்ருட்டி மற்றும் கேரளாவில் பலாப்பழ சீசன் துவங்கியதால் அங்கிருந்து ஈரோட்டுக்கு அதிகளவில் பலாப்பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

தற்போது பண்ருட்டி வட்டாரத்தில் பலாப்பழம் அறுவடை சீசன் துவங்கியுள்ளதால், ஈரோடு மார்க்கெட்டிற்கு பலாப்பழம் வரத்து அதிகளவில் உள்ளது. மார்க்கெட் பகுதியில் உள்ள பழ மண்டிகளில் பண்ருட்டி பலாப்பழங்கள் 5 கிலோ முதல் 30 கிலோ எடை வரையில் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளன.

# உலக வனநாளையொட்டி 6 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய வனத்துறை முடிவு

தர்மபுரி, மார்ச் 21

உலக வனநாளையொட்டி தர்மபுரி மாவட்டத்தில் வரும் ஜுலை – செப்டம்பர் மாதம் வரை 6 லட்சம் மரக்கன்றுகள் நடவு செய்ய வனத்துறை முடிவு செய்துள்ளது.

தமிழகத்தின் வனப்பரப்பை 23.7 சதவிகிதத்தில் இருந்து 33 சதவிகிதமாக உயர்த்தும் நோக்கோடு, தமிழ்நாடு பசுமை இயக்கத்தை, தமிழக முதல்வர் முக.ஸ்டாலின் கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் 24ம் தேதி தொடங்கி வைத்தார். அடுத்த 10 ஆண்டு காலத்தில் நகர்ப்புற பகுதிகள், விவசாயப் பண்ணைகள், கல்வி நிறுவனங்கள், கோயில் நிலங்கள், தொழிற்சாலைகள், ஏரிக்கரைகள் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகள், ஆற்று படுகைகள், பொது நிலங்களில் உள்ளூர் மர வகைகள் நடப்படும்.



# இயற்கை விவசாயியை சந்தித்து கரிமப் பொருட்கள் தயாரிப்பு குறித்து அறிந்து கொண்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, மார்ச் 21

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைகழகத்தை சேர்ந்த வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் கிராமப்புற விவசாய பணி அனுபவத் திட்டத்தினை (RAWE) ஸ்ரீரங்கம் வட்டம், அந்தநல்லூர் பகுதியில் தங்கி மேற்கொண்டுள்ளனர். இதன் ஒரு அங்கமாக மாணவர்கள் அரிஞ்சய சோழன், பாலாஜி, ஆறுமுக சாமி, ஆகாஷ்.பா, ஆகாஷ்.எம், அதிஷ் மற்றும் குரு பிரசாத் அருகிலுள்ள புலிவலம் கிராமத்தில் உள்ள ஒரு இயற்கை விவசாயியை சந்தித்து, கரிம விவசாய முறைகள் குறித்து நேரடியாக அறிந்தனர்.

இந்த சந்திப்பின் மூலம் இயற்கை விவசாயத்தில் பயன்படுத்தப் படும் பல்வேறு கரிமப் பொருட்களின் தயாரிப்பு முறைகள் குறித்து மாணவர்கள் புரிதல் பெற்றனர். இயற்கை விவசாயி, நிலத்தின் வளத்தை பாதுகாக்கவும், இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்கவும் கரிமப் பொருட்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று விளக்கினார். குறிப்பாக, பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம் போன்ற கரிம உரங்கள் மற்றும் பூச்சி கட்டுப்பாட்டு கரைசல்கள் தயாரிக்கும் முறைகளை நடைமுறையில் காட்டி விளக்கினார்.

மேலும், வேப்ப எண்ணெய் கரைசல், பசும்பால் சார்ந்த கலவைகள் போன்றவை பயிர்களுக்கு பாதிப்பு இல்லாமல் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த உதவுகின்றன என்றும், இவை குறைந்த செலவில் தயாரிக்கக்கூடியவை என்றும் கூறினார். மாணவர்கள் இந்த தயாரிப்பு முறைகளை நேரடியாகக் கண்டு கற்றுக்கொண்டு, அதன் பயன்கள் மற்றும் பயன்பாடு குறித்து விவசாயியுடன் கலந்துரையாடினர். இவ்வாறு பெற்ற அனுபவம், இயற்கை விவசாயத்தின் மீது மாணவர்களுக்கு மேலும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. இந்த பயணம் கரிம விவசாய முறைகள் பற்றிய அறிவை மம்படுத்துவதுடன், நிலைத்திருக்கும் விவசாயத்தின் அவசியத்தை உணர்த்தும் வகையில் அமைந்தது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# உலக தண்ணீர் தினம் இன்று - ஓர் பார்வை (WORLD WATER DAY)




செயற்கை நுண்ணறிவு, விண்வெளி பயணம், தானியங்கி ரோபோக்கள் என அபரிமிதமான தொழில்நுட்ப வளர்ச்சி என ஏற்பட்ட இக்காலகட்டத்தில் கூட தண்ணீருக்கு பெண்கள் கிலோ மீட்டர் கணக்கில் நடக்கும் அவல நிலைதான் இன்றும் தொடர்கிறது.

நீரின்றி அமையாது உலகு என்பதற்கிணங்க இந்த உலகம் கடலால் சூழப்பட்டு இருந்தாலும் கூட, உலக மக்கள் தொகையில் 26% குடிநீருக்காக போராடி வருவது குறிப்பிடத் தக்கது. தண்ணீருக்காக வருங்காலத்தில் என்ன நடக்கும் என்பது இன்னும் அச்சமூட்டுகின்றன. வருகிற 2050க்குள் கடும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் என எச்சரிக்கப்படுகிறது. உலக தண்ணீர் தினமாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது என்பது நாம் அறிந்தே.

**இந்த ஆண்டிற்கான கருப் பொருள் (THEMES) என்ன?**

இந்த 2026 ஆம் ஆண்டிற்கான உலக தண்ணீர் தினத்தின் கருப்பொருள் தண்ணீரும் பாலினமும் (WATER AND GENDER) இதனுடைய முழுக்கம் என்வெனில் தண்ணீர் செழிப்பாக உள்ள இடமெல்லாம் சமுத்துவம் வளரும் என்பது தான். (WHERE WATER FLOWS EQUALLY GROWS).

**தண்ணீருக்காக அலையும் பெண்களின் நிலை?**

ஒரு பெண் நாள் ஒன்றுக்கு சாரசரியாக 20 லிட்டர் எடையுள்ள தண்ணீரை சுமப்பது அவர்களின் வாழ்நாள் சாபமாக மாறிவிடுகிறது. இவ்வளவு பெரிய எடையுள்ள குடத்தை தலையில் சுமக்கும் போது கழுத்து எலும்பு மூட்டுகள் தேய்மானம் வர வாய்ப்புள்ளது. பெண்களின் ஆரோக்கியமே ஒரு சமூகத்தின் ஆரோக்கியம். பெண்கள் தண்ணீருக்கு செலவிடும் ஒவ்வொரு மணி நேரம் அவர்களின் சுதந்திரத்தை பறிக்கும் மிகப்பெரிய சுமையாக கருதப்படுகிறது.

இது தண்ணீருக்கானது மட்டுமல்ல, அது பாலினச் சமத்துவமின்மையின் வெளிப்பாடும் கூட. தொழில்நுட்பம் ஒரு புறம் வளர்ந்தாலும் இந்த ஆண்டிற்கான முக்கிய இலக்கு களில் நீர் மேலாண்மை திட்டமிடுதலில் அதிகளவு அதிகார மிக்க இடங்களில் அமர்த்துவதும் ஒன்றாகும்.

**2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வந்த நல்ல செய்தி என்ன?**

உலகம் முழுவதும் சுமாராக 220 கோடி பேர் பாதுகாப்பான குடிநீர் வசதியை பெற்றுள்ளனர் என்பதே. ஜல் ஜீவன் குடிநீர் நம்முடைய இந்தியாவில் பட்டி தொட்டிகளில் அமைக்கப் பட்டுள்ளது. 2030 ஆம் ஆண்டிற்குள் உலகில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதி கிடைப்பதை அவற்றின் நிலையினை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது.

**பாதுகாப்பற்ற நீரால் என்னென்ன நோய்கள் வரும்?**

பாதுகாப்பற்ற நீரால் பரவும் காலரா, வயிற்று போக்கு, டைபாய்டு உண்டாக்கிறது. உலக அளவில் ஒவ்வொரு 90 நொடிக்கும் ஒரு குழந்தை அசுத்தமான நீரினால் ஏற்படும் நோய்களால் உயிரிழப்பதாக தரவுகள் உள்ளன.

**நீர் மேலாண்மை?**

உலக நாடுகள் நீர் மேலாண்மைக்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாலும் ஒவ்வொரு தனி மனிதருக்கும் இதில் மிகப்பெரிய பொறுப்பு உள்ளது.

1) வீடுகளில் மழை நீர் சேகரிப்பு (RAIN WATER HARVESTING TECHNOLOGY) வசதியை அமைப்பது,

2) ஒரு முறை பயன்படுத்தி நீரை மறுசுழற்சி (RECYCLING) செய்து விவசாய தோட்டங்களுக்கு பயன்படுத்துவது,

3) நீர் கசியும் குழாய் ஓட்டைகளை உடனடியாக சரி செய்தல்.

இவ்வாறாக செய்வதன் மூலம் தினசரி பயன்பாட்டிற்கான நீரை குறைக்க வழி ஏற்படும். மிக முக்கியமாக சொட்டுநீர் பாசனத்தை (DRIP IRRIGATION) வருங்கால தலைமுறைக்கு சிறு வயதிலேயே கற்பிப்பதன் விளைவாக வளமான எதிர்காலத்தை கொடுக்க முடியும்.

ஏனெனில் நீர் என்பது வணிக பொருள் அல்ல. அது நம்முடைய அடிப்படை உரிமையாகும். ஒரு காலத்தில் பொருளாதார படிப்பில் (FREE GOODS) தண்ணீர் காற்று என்று படித்த நாம் அவை இன்று வணிக பொருளாக மாறி விட்டது. அனைத்து மக்களுக்கும் தரமான குடிநீர் வழங்க வேண்டியது அரசின் கடமையாகும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# தமிழக இயற்கை உழவர்கள் கூட்டியக்க கலந்தாய்வு கூட்டம்



திண்டுக்கல், மார்ச் 21

கடந்த 17, 18.3.26ம் தேதிகளில் தமிழக இயற்கை உழவர்கள் கூட்டியக்கம் கலந்தாய்வு கூட்டம் திண்டுக்கல் காந்தி கிராமம் ஊழியரகத்தில் நடைபெற்றது. இதில் ஆளுமை பயிற்சி, பட்டறை இயக்கம், செயல்வடிவம் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் வானகம் அறங்காவலர்கள் ரமேஷ் மற்றும் வெற்றி மாறன் துவக்கி வைத்து பேசினர். இரண்டு நாட்கள் கூட்டத்தை பாமயன் அய்யா நடத்தினார். மேலும் இமாக்கிரன் ஐந்துணை வேலுச்சாமி அய்யா மற்றும் இயற்கை உழவர்கள் தமிழகம் முழுவதும் இருந்து 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

# நவீன வேளாண்மையில் மண்புழு குளியல் நீர்

தண்ணீரை மண்புழுக்களின் மேல் ஊற்றி கழுவியபின் கிடைக்கும் திரவம் தான் மண்புழு குளியல் நீர். இதை செடிகளில் தெளிக்கும் போது செடிகளின் வளர்ச்சியும், உற்பத்தியும் அதிகரிக்கிறது மற்றும் செடிகளின் நோய்களும் கட்டுப்படுகின்றன.



மண்புழுவிலிருந்து வெளியாகும் கழிவு மற்றும் சுரப்பி களிலிருந்தும் இந்த நீர் தயாரிக்கப்படுகிறது. முறையாக தயாரிக்கப்படும் மண்புழு குளியர் நீர் இளம் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

இந்தக் குளியல் நீரானது பயிர்களில் அற்புதமாக வேலை செய்யும் வளர்ச்சி ஊக்கியாகும். அதிகமான எண்ணிக்கையில் சொட்டு சொட்டாக தண்ணீரை விட வேண்டும். இந்த தண்ணீர் மண்புழுக்களை கழுவிக்கொண்டு அவைகளின் உடல்மேல் இருக்கும் ஹார்மோன்களை சேர்த்துக்கொண்டு வெளியேறும். இந்தத் தண்ணீர் தேயிலை வடித்த தண்ணீர் நிறத்தில் இருக்கும். பானை மூலம் மிக எளிதாக மண்புழு குளியல் நீர் சேகரிக்க லாம். இது மிக எளிய முறையாகும். இந்த நீரை அனைத்துப் பயிர்களுக்கும் அப்படியே தெளிக்கலாம். 1 முதல் 2 லிட்டர் தண்ணீர் சேர்த்தும் தெளிக்கலாம். பம்பாய் நிறுவனம் ஒன்று மண்புழு குளியர் நீரை லிட்டர் ரூ.500 என விற்கிறது. அவ்வளவு சிறப்பு மிக்கது இந்த நீர். அமுதக் கரைசலை 1 பங்கிற்கு 10 பங்கு தண்ணீர் சேர்த்து வளர்ச்ச ஊக்கியாகப் பயன்படுத்தலாம். மாட்டு கோமியத்தையும் 1க்கு 10 பங்கு நீர் சேர்ந்து பயன் படுத்தலாம்.

**செய்முறை விளக்கம்**

1995ல் ரமேஷ் அவர்களின் முறைப்படி மண்புழு குளியல் நீர் தயாரிப்பதற்கு, 30 செ.மீ உயரமுள்ள மண்பானையில் 10 செ.மீ. அளவிற்கு சிறு கற்களை நிரப்ப வேண்டும். அதன்மேல் வடிகட்டும் தாள் அல்லது துணியை பரப்ப வேண்டும். அதன் மேல் எருக்கு மற்றும் 150 - 200 மண்புழுக்களையும் பரப்ப வேண்டும். பானையின் அடி பாகத்தில் துளை அமைத்து, அதன் வழியே ஒரு குழாயைப் பொறுத்தி, அதன் வழியாக மண் புழுக்களின் குளியல் நீரை சேகரிக்க வேண்டும். மண்புழுவிற்கு உணவாக தினமும் 2 முதல் 3 தேக்கரண்டி எரு, சாணத்தை எருமக்கின் மேல் தூவ வேண்டும். பானையின் மேல் பாகத்திலிருந்து தினமும் 100 மில்லி தண்ணீர் விட வேண்டும். நீர் மண்புழுவுடன் கலந்து இறுதியில் வடிகட்டிய மண்புழு குளியல் நீர் கிடைக்கிறது. இந்த முறைப்படி தினமும் 100 மில்லி மண்புழுக்களின் குளியல் நீர் கிடைக்கிறது. இந்த நீரை ஒவ்வொரு செடிக்கும் 100 மில்லி, வேர் பகுதியில் ஊற்றலாம் அல்லது நான்கு முறை நீர்க்கச் செய்து செடிகளுக்கு ஊற்றலாம்.

1997ல் இஸ்மாயில் அவர்களின் முறைப்படி மண்புழு குளியல் நீர் தயாரிக்க ஒரு பீப்பாயின் அடியில் சிறு கற்களை நிரப்பி அதன் மேல் தோட்டத்து மண்ணை ஒரு அடுக்காக அமைக்க வேண்டும். அதன் மேல் மண்புழுக்களை இட வேண்டும். குறுகிய காலத்தில் உரம் தயாரிக்க எபிஜியிக் மண் புழுக்களையும் அனசிக்ஸ் மண் புழுக்களும் உபயோகப்படுகின்றன. பீப்பாயின் மேல் மட்டத்தில் மக்கிய சாணம் இடவும். தினமும் பானையின் மேல் இருந்து தண்ணீர் தெளிக்க வேண்டும். குளியல் நீர் சேகரிக்க பீப்பாயின் அடியில் ஒரு குழாய் வைக்கவும். மண்புழு குளியல் நீரை நேரடியாகவோ அல்லது தண்ணீருடன் கலந்தோ அல்லது பத்து சதவிகிதம் கோமியத்துடன் கலந்தோ உபயோகிக்கலாம். மண்புழு குளியல் நீரில் செடிகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஜிப்ரெலின் 2.75 மி.கி/கி, சைடோகைனின் 1:05 மி.கி/கி மற்றும் ஆகிஸினும் 3.80 மி.கி/கி. உள்ளது. இதனால் பயிர்களின் அபரிமிதமான வளர்ச்சி அடைகின்றன.

1998ல் கவே என்பவரின் முறையில், வெளிப்புற பாத்திரம் அதன் உள்ளே உட்புற பாத்திரம் அமைக்க வேண்டும். உட்புற பாத்திரத்தின் அடி பாகத்தில் மண்புழு குளியல் நீரை வெளியேற்றுவதற்காக ஒரு குழாய் பொருத்தப்பட்டிருக்கும். அந்த பாத்திரத்தில் மக்கும் பொருட்கள், 1 முதல் 2 கிலோ கிராம் வரை மண்புழுக்களையும் நிரப்ப வேண்டும். அந்த பாத்திரம் 12 முதல் 16 லிட்டர் நிரப்பும் அளவுடைய பாத்திரமாக இருக்க வேண்டும். தண்ணீரை பாத்திரத்தின் மேலே மெல்ல ஊற்ற வேண்டும். உட்புறபாத்திரத்தில் இருக்கும் அதிகப்படியான தண்ணீர் அதில் உள்ள பொருட்களின் வழியாக பாய்ந்து, இறுதியில் வெளியேற்றப்படுகிறது. அந்த நீர் வெளிப்புற பாத்திரத்தில் சேகரிக்கப்படுகிறது. இந்த நீரை மண்புழு குளியல் நீராக, தண்ணீருடன் கலந்து பலவிதமான பயிர்களுக்கு தெளிக்கலாம்.

1954ல் கோபாட்கே என்பவர், மண்புழு கழிவிற்கு பாக்டீரியாவை எதிர்க்கும் சக்தி உள்ளது என்பதை கண்டறிந்தார்.

மண்புழு குளியல் நீரை செடிகளில் தெளிக்கும் போது அதிகமான விளைச்சல் கிடைத்தது. மண்புழு குளியல் நீரை செடிகளில் தெளிக்கும் போது பழுத்த இலைகள் அனைத்தும் பச்சை நிறமாக மாறியதைக் கண்டறிந்தார். மண்புழு குளியல் நீரை செடிகளில் தெளிக்கும் போது பூக்களில் எண்ணிக்கை 25 சதவீதமாக அதிகரித்தது.

தகவல் : *வி.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மைப் பொறியாளர், உடுமலைப்பேட்டை*

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மரம் மற்றும் தீவன உற்பத்தியை பெருக்கும் நிலையான நில பயன்பாடு முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, மார்ச் 21

திருச்சிராப்பள்ளி சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை கல்லூரியை சேர்ந்த இறுதி ஆண்டு மாணவிகள் கிராமிய வேளாண்மை பயிற்சி, (Rawe) திட்டத்தின் கீழ் புள்ளம்பாடி வட்டத்திற்கு உட்பட்ட புஞ்சை சங்கேந்தி கிராமத்தில் மர மேச்சல் நிலம் (Silvipasture) பற்றி கூறினோம்.

Silvipasture அல்லது மேய்ச்சற்காடு முறை என்பது காடுகள்/மர வளர்ப்பு மற்றும் கால்நடை மேச்சல் ஆகியவற்றை ஒருங் கிணைந்து, ஒரே நிலத்தில் மரம் மற்றும் தீவன உற்பத்தியை பெருக்கும் நிலையான நில பயன்பாடு முறையாகும். இது மரங்கள், புல்கள் மற்றும் கால்நடைகளை ஒருங்கிணைத்து, வறண்ட நிலங்களில் மண்வளத்தை மேம்படுத்தி, கால்நடை தீவனம் பற்றாக்குறையை போக்க உதவுகிறது.

**முக்கிய அம்சங்கள் மற்றும் நன்மைகள்**

✓ பயிரிடப்படும் மரங்கள்

✓ கால்நடை ஒரு கிணைப்பு

✓ மேம்பட்ட மண்வளம்/கார்பன் சேமிப்பு

✓ பொருளாதார பலன்கள்.

**நன்மைகள்**

# பன்முக வருமானம்

# செலவு குறைப்பு

# இடர் வேளாண்மை

# வெப்ப அழுத்தம் குறைதல்

# மண் மற்றும் சுற்றுப்புற நன்மைகள்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கிரியா விவசாயிகள் Silvipasture பற்றிய சந்தேகங்களை மாணவர்களிடம் கேட்டுத்தெளிவு பெற்றனர்.


ஜெயின்
நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# வெள்ளாடுகளில் மடி நோயும் அவற்றின் மேலாண்மை

மடி நோய் என்பது, பால் சுரக்கும் தசையில் ஏற்படும் அழற்சி ஆகும். இது பல்வேறுபட்ட காரணிகளால் ஏற்படுகிறது. குறிப்பாக பாக்டீரியா எனும் நுண்ணுயிரிகளாலும், நச்சுயிரி களாலும், பூஞ்சைகளாலும் மற்றும் மடியில் ஏற்படும் காயங் களாலும் ஏற்படுகின்றது. ஆட்டுப் பண்ணையில் மடி நோயானது எல்லா விதமான வெள்ளாட்டு இனங்களிலும் அவற்றின் பால் அளவை பொருத்தல்லாமல் ஏற்படும்.

**மடி நோயின் அறிகுறிகளாவன :** பால் அளவு குறைதல், பாலின் தன்மை குறைதல், நிறம், மணம், சுவையில் மாற்றம், கால் தாங்குதல் மற்றும் மடியின் நிலை மாறுதல் ஆகியவை யாகும். ஆடுகளில் நுண்ணுயிரித் தொற்று மடி நோயானது பொதுவாக காணப்படும், இவை தொற்று அல்லது பரவக் கூடியது, குறிப்பாக பால் கறவையின் போதும்.

**மடி நோய்க்கு காரணமான நோய்க் கிருமிகள்**

கண்ணுக்கு தெரிந்த மடி நோயானது, பல்வேறுபட்ட நுண்ணு யிரிகளால் ஏற்படுகிறது. அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்று ஸ்டபைலோகாக்கஸ் ஆரியஸ். இந்த நுண்ணுயிரியால் ஏற்படும் மடி நோயானது கோங்கரினெஸ் மடி நோயாகவும் மாறி திசு அழுகலை மடியில் ஏற்படுத்துகிறது. இதனால் மடியானது அழுகி சுறுங்கி விழுதல், சில நேரங்களில் இறக்கவும் நேரிடலாம். கண்ணுக்கு தெரியாத மடி நோயானது கோயா குளேஸ் நெகட்டிவ் ஸ்டபைலோகாக்கஸ் நுண்ணுயிரியால் ஏற்படுகிறது. அவ்வகை மடி நோயில் பால் அளவு குறைதல், அதிகபடியான சொமாடிக் செல் வெளியேறுதல் மற்றும் நுண்ணுயிரிகள் இருத்தல் ஆகும்.

**ஆடுகளில் மடி நோயின் அறிகுறிகள்**

- மடி வீக்கம், மடியின் வெளிப்புற வெப்பம் அதிகரித்தல்
- உடல் வெப்பநிலை அதிகரித்தல்
- பால் நிறமாறியிருத்தல் (மஞ்சள், வெளிறிய பச்சை, ஆரஞ்சு நிறம், பிரௌன் அல்லது இரத்தம் கலந்து)

● கால் தாங்கி நடத்தல்

● தீவனம் உண்ணாமை

மடி நோய் தடுப்பதற்காக செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை

● சுகாதாரமான பால் உற்பத்திக்கு, மிகமிக முக்கியமானது சுகாதாரமான மடி. பால் மடியை எவ்வாறு சுகாதாரமாக பராமரிப்பது என அறிவது அவசியம்.

● பால் மடியும், ஆடுகளின் பின்புற பகுதியும் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நீரால் கழுவப்படவேண்டும். எவ்வித சாணமோ, தூசியோ இருக்கக்கூடாது.

● மடியிலும், மடியை சுற்றியிலும் உள்ள பகுதிகளில் அதிக மாக வளர்ந்திருக்கும் முடியை வெட்டி சுத்தப்படுத்த வேண்டும்.

● குட்டிகள் பால் குடித்த பின், காம்பு துவாரம் வழியாக நோய் கிருமிகள் பரவாமல் இருக்க சேவ்லான் மருந்தை ஒரு டம்ளர் தண்ணீருக்கு 2 சொட்டு வீதம் கலந்து காம்புகளை மூழ்கி எடுக்க வேண்டும்.

● பால் கறந்த பின் காம்பு துவாரங்கள் சில நிமிடங்கள் மூடிக்கொள்ளாமல் இருக்கும். இந்நிலையில் ஆடு மாடுகள் தரையில் படுத்தால் கிருமிகள் காம்பில் உள்ளே சென்று விடும். இதை தவிர்க்க பால் கறந்தவுடன் சிறிது தீவனம் அளித்து ஆடுகள் உடனே படுப்பதை தவிர்க்கலாம்.

● தரைகள் எப்போதும் உலர்ந்த நிலையில் இருக்க வேண்டும்.

● பால் கொட்டகைகளின் தரைகள் தினம் தோறும் கிருமி நாசினி கலந்த நீரால் கழுவப்பட வேண்டும்.

● அடிக்கடி மடி நோய் காணும் ஆடுகளை பண்ணையிலிருந்து அகற்றுதல் நலம்.

● முந்தைய ஈற்றில் மடி நோய் இருப்பின் மருத்துவரின்



உதவியுடன் சினைக்கால ஆடுகளுக்கு காம்பின் வழியாக தகுந்த உயிர் கொல்லி மருந்துகள் செலுத்துவதன் மூலம் குட்டி ஈன்றிய பின் வரும் மடி நோயை தவிர்க்கலாம்.

● காம்பு அல்லது மடிகளில் சிறிய புண் இருப்பினும் கூட உடனே அதை குணப்படுத்த வேண்டும்.

● மடி மற்றும் மடிக்காம்புகளை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் கிருமி நாசினியைக் கொண்டு குட்டிக்கு ஊட்டும் முன்பும் பின்பும் கழுவுதல் வேண்டும். பின்பு உலர்ந்த துணியைக் கொண்டு நன்கு துடைக்க வேண்டும்.

● குறிப்பிட்ட கால இடைவெளியில் மடியின் நிலையை பரிசோதிக்க வேண்டும். பால் கறவையின் முதல் 2 அல்லது 3 சுரப்புகளை பரிசோதிக்க வேண்டும்.

● பண்ணையில் ஈக்கள் மற்றும் கொசுக்கள் உற்பத்தியை முற்றிலும் கட்டுப்படுத்துதல் வேண்டும். இவை ஆட்டின் மீது அல்லது பால் கறவை பொருட்களில் அதிகம் இருக்குமாயின் மடி நோய் அடிக்கடி ஏற்படலாம். எனவே மடி நோயைக் கட்டுப்படுத்துவதில் ஈக் கொல்லி மருந்துகளை மாட்டின் மீதும் தொழுவத்திலும் தெளித்தல் மிக அவசியமாகும்.

● மடி மற்றும் காம்புகளை கழுவுவதற்கு தூய தண்ணீரை தேவைப்படும் அளவிற்கு மட்டுமே உபயோகிக்க வேண்டும். ஏனெனில் தரமற்ற தண்ணீர் மூலமாக மடி நோய் ஏற்படுத்தும் நோய்க்கிருமிகள் அதிகம் பரவ வாய்ப்புள்ளது.

● காம்புகளில் வீக்கம் இருப்பின் உடனடி சிகிச்சை மருத்துவரால் தொடங்கப்பட வேண்டும்.

இவ்வாறாக மடியை பராமரித்தோமேயானால் ஆடுகளில் ஏற்படும் மடி நோயை குணடுப்படுத்தி குட்டிகளுக்கு தேவையான பாலினை கொடுத்து ஆரோக்கியமான குட்டியினை வளர்த்தெடுத்து ஆடு வளர்ப்பில் இலாபம் ஈட்டலாம்.

தகவல் : ***முனைவர் ஆ.வெங்கடேசன் மற்றும் முனைவர் ஞ.சிவராமன், கால்நடை சிகிச்சை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் – 636 112.***

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**